# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : STC No.07/2024 Date: 17.02.2026
Deposition of Witness for : பு.சா.1
Name : தாசசேகரன்

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :-**

1) எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பிற்கு நான் மறுப்பு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் டீ கடை மற்றும் பாஸ்ட் புட் கடை வைத்திருந்தார். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனது மாத வருமானம் என்ன என்றால் ரூ.20,000/-ம் வருமானம் வரும். நான் விவசாயம் தவிர வேறு ஏதேனும் செய்து வருகிறேனா என்றால் கூலி வேலைக்கும் சென்று வருவேன்.

2) நான், எதிரியை தவிர வேறு யாருக்காவது கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியிடம் எவ்வளவு வட்டிக்கு கடன் கொடுத்தேன் என்றால் நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. எதிரிக்கும், எனக்கும் இந்த பணபரிவர்த்தனை தவிர வேறு எந்த பணபரிவர்த்தனையும் இல்லாதபோது, டீ கடை வைத்திருக்கும் எதிரிக்கு ரூ.3,00,000/-ம் தொகை கடனாக கொடுத்ததாக சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல.

3) இந்த வழக்கு காசோலையை வைத்துகொண்டு நான் எதிரிக்கு ரூ.3,00,000/-ம் தொகை கடனாக கொடுத்ததாக சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல, வங்கியில் லோன் பெற்று திருப்பி தருவதாக கூறினார், நானும் அவர்மீது இருந்த நம்பிக்கையில் கடன்

கொடுத்தேன். எதிரி வங்கியில் லோன் பெற்று என்னிடம் பெற்ற கடன் திருப்பி தருவதாக கூறியதாக நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றும், எதிரி என்னிடம் சீட்டு போட்டிருந்த வகையில் பிணையமாக கொடுத்த காசோலையை வைத்து மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கை எதிரிமீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கு காசோலை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எதிரியின் மற்றொரு காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை, எதிரி என்னிடம் இந்த வழக்கு காசோலையை தவிர வேறு எந்த காசோலையையும் கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் நிரப்பப்படாத மூன்று காசோலைகளை கொடுத்தார் என்றும், நான் தான் இந்த வழக்கு காசோலையை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) எதிரி கடன் பெற்றபோது வழக்கு காசோலை கொடுத்த விவரம் வேறு யாருக்கும் தெரியாது என்றால சரியல்ல, எனது மனைவி வெண்ணிலாவிற்கு தெரியும். எதிரிக்கு எத்தனை மணிக்கு கடன் கொடுத்தேன் என்றால் காலை சுமார் 10.00 – 11.00 மணி இருக்கும். எதிரி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், வழக்கு காசோலையை கடனுக்காக கொடுக்கவில்லை என்றும், இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Dhasasekaran